# Verified RealEstate™

Your trusted partner for buying, selling, and managing property, ensuring hassle-free service with 100% transparency.

3/350/2 Mettukuppam,
OMR Thoraipakkam,
Chennai, India

hello@verified.realestate
+91 9996 12 9996

**Official Property Record**

Digitally Verified Record - Powered by Verified RealEstate™



# தமிழ்நாடு அரசு

## மாவட்ட நகர் ஊரமைப்புத்துறை உறுப்பினர் செயலர் / உதவி இயக்குநர் கரூர் மாவட்டம் அவர்களின் செயல்முறை ஆணை

பிறப்பிப்பவர் : திரு.க.மூக்கையா, பி.இ.,எம்டெக்.,

ந.க.எண்-95/2021/காபுநவகு

நாள்- 20.10.2021.

பொருள் : மனைப்பிரிவு - கரூர் மாவட்ட நகர் ஊரமைப்பு அலுவலகம் - காகிதப்புரம் புதுநகர் வளர்ச்சி குழுமம் - கரூர் மாவட்டம் - புகளூர் வட்டம் - காகிதபுரம் பேரூராட்சி – புஞ்சைபுகளூர் தெற்கு கிராமம் -சர்வே எண்-**1141/2-ல்** 1.09 ஏக்கர் (0.44.00 ஹெக்டேர்) பரப்பளவுள்ள இடத்தில் உத்தேச குடியிருப்பு மனைப்பிரிவிற்கான தொழில்நுட்ப ஒப்புதல் வழங்குதல்–குறித்து.

பார்வை :

1. மனுதாரர். திரு.P.சம்பத் (ம) திரு.K.சுப்ரமணியம். எண்.3, கிருஷ்ணபட்டரை தெரு, வேலாயுதம்பாளையம், கரூர் அவர்களின் விண்ணப்பம் பெறப்பட்ட நாள்-29.07.2021.
2. இவ்வலுவலக கடிதம் இதே எண். நாள்.**17.08.2021** மற்றும் **23.09.2021.** (கட்டணங்கள் செலுத்தக் கோரி).
3. நகர் ஊரமைப்பு இயக்குநர், சென்னை அவர்களின் சுற்றறிக்கை கடிதம் ந.க.எண்-19799/2020/போ, நாள்-24.12.2020 மற்றும் 08.02.2021.
4. மனுதாரர் திரு.P.சம்பத் (ம) திரு.K.சுப்ரமணியம். எண்.3, கிருஷ்ணபட்டரை தெரு, வேலாயுதம்பாளையம்,கரூர் அவர்களின் விண்ணப்பம் நாள்.21.09.2021 அவர்களின் கடிதம் மூலம் தானப்பத்திரம் பெறப்பட்ட நாள்-13.09.2021.
5. அரசாணை எண்-138, வீட்டுவசதி மற்றும் நகர்ப்புற வளர்ச்சித்துறை, நாள்-04.06.2004.
6. அரசாணை எண்-18, நகராட்சி நிர்வாகம் மற்றும் குடிநீர் வழங்கல் ந.நி-(1)துறை, நாள்-04.02.2019 மற்றும் அரசாணை எண்-16, நகராட்சி நிர்வாகம் மற்றும் குடிநீர் வழங்கல் ந.நி-(1)துறை, நாள்-31.01.2020.
7. அரசாணை எண்-141, வீட்டுவசதி மற்றும் நகர்ப்புற வளர்ச்சித்(UD4(3) துறை, நாள்-23.09.2020.
8. அரசாணை எண்-181, வீட்டுவசதி மற்றும் நகர்ப்புற வளர்ச்சித்(UD4(1) துறை, நாள்-09.12.2020.
9. அரசு கடிதம் எண்-19113/நவ4(3)/2017-1, வீட்டுவசதி மற்றும் நகர்ப்புற வளர்ச்சித்துறை, நாள்-30.12.2020.
10. நகர் ஊரமைப்பு ஆணையாளர் அவர்களின் சுற்றறிக்கை ந.க.எண்-13686/2017/ LA1, நாள்-08.09.2017.
11. தலைவர் / மாவட்ட ஆட்சியர், காகிதபுரம் புதுநகர் வளர்ச்சிக்குழும கூட்டப்பொருள்.08 தீர்மானம் எண்.08, நாள்.09.09.2021.
12. மனுதாரர் திரு.P.சம்பத் (ம) திரு.K.சுப்ரமணியம். எண்.3, கிருஷ்ணபட்டரை தெரு, வேலாயுதம்பாளையம், கரூர் அவர்களின் விண்ணப்பம் கட்டணம் செலுத்தப்பட்டு விபரம் பெறப்பட்ட நாள்.05.10.2021.

********

கரூர் மாவட்டம் , புகளூர் வட்டம் , காகிதபுரம் பேரூராட்சி , புஞ்சைபுகளூர் தெற்கு கிராமம், சர்வே எண்-**1141/2-ல்** 1.09 ஏக்கர் (0.44.00 ஹெக்டேர்) பரப்பளவில் அமையும் குடியிருப்பு மனைப்பிரிவிற்கான அனுமதி கோரி பெறப்பட்ட குடியிருப்பு மனைப்பிரிவு

இசைவுக்கான கோரிக்கை, பரிசீலிக்கப்பட்டு, பார்வை (2)-ல் கண்ட இவ்வலுவலக கடிதம் நாள் 17.08.2021 மூலம் மனைப்பிரிவு சாலை அமைப்பு வரைபடம் இசைவு வழங்கப்பட்டது. பார்வை(4)-ல் கண்ட கடிதம் மூலம் சாலை மற்றும் பொது ஒதுக்கீடுகளை உள்ளாட்சியிடம் தானமாக தானபத்திர எண்-1227/**2021,** நாள்- **13.09.2021**-ல் ஒப்படைக்கப்பட்டு அசல் ஆவணம் பெறப்பட்டுள்ளது. அதனை தொடர்ந்து மனைப்பிரிவு நிபந்தனைகளுடன் உத்தேச மனைப்பிரிவுக்கு கீழ்க்கண்ட ஆணை பிறப்பிக்கப்படுகிறது.

1) மனைப்பிரிவிற்கு இணைப்பில் உள்ள மனைப்பிரிவு நிபந்தனைகளின்படி ஒப்புதல் வழங்கப்படுகிறது. ஒப்புதல் வழங்கப்பட்ட மனைப்பிரிவு வரைபடத்திற்கு ம.வ/காபுநவகு (க.மா) எண்- **13/2021** மற்றும் பார்வை (11) ல் சுட்டிய தலைவர் / மாவட்ட ஆட்சியர், காகிதபுரம் புதுநகர் வளர்ச்சிக்குழும கூட்டப்பொருள்.08 தீர்மானம் எண்.08, நாள்.09.09.2021.ல் ஒப்புதல் பெறப்பட்டதற்கிணங்க திட்ட அனுமதி எண்.19/2021 என எண்ணிடப்பட்டு 2 அசல் வரைபடங்கள் மற்றும் அசல் தானபத்திரம் மேல்நடவடிக்கைக்காக இத்துடன் அனுப்பி வைக்கப்படுகிறது.

2) மேலும், உள்ளாட்சியால் இறுதி ஒப்புதல் அளிக்கப்படும் போது மனைப்பிரிவு நிபந்தனை எண்-9(ஈ) -ன்படி அவ்வாணையின் நகலினை உடனடியாக இவ்வலுவலகத்திற்கு அனுப்பி வைக்குமாறும் கேட்டுக்கொள்ளப்படுகிறது.

3) உள்ளாட்சியின் ஒப்புதலுடன் அங்கீகரிக்கப்பட்ட மனைப்பிரிவு வரைபடத்தினை சம்பந்தப்பட்ட பத்திரப்பதிவு அலுவலகத்திற்கும், நில அளவைத் துறைக்கும், தகவலுக்கும் உரிய நடவடிக்கைக்கும் அனுப்புமாறு தெரிவிக்கப்படுகிறது.

4) செயலாணைக் கடிதம், மனைப்பிரிவு நிபந்தனைகள் மற்றும் வரைபடங்கள் பெற்றுக்கொண்டமைக்கான ஒப்புகைச் சான்றினை உடன் அனுப்பி வைக்குமாறும் தெரிவித்துக்கொள்ளப்படுகிறது.

**சிறப்பு நிபந்தனைகள்**

1) (a) பார்வை (8)-ல் கண்ட அரசாணை மற்றும் பார்வை (6)-ல் TNCDBR -2019-ல் விதி எண்-47 (11)-ன்படி மாநகராட்சி / நகராட்சி பகுதி எனில் " Collecting the necessary fees including the charged for providing amenities like roads, storm water drains and street lights from the applicants" . After collecting the necessary fees the final layout sketch, permit of planning authority along with approval of Local Body shall be issed to the applicant(s) directly.

(b) மாநகராட்சி / நகராட்சி அல்லாத பகுதிகளில் " Shall collect the necessary fees and issue the final layout sketch. permit of planning authority along with the permit of local body to the applicants directly, only after ensuring that the applicant lays tar roads, provide other amenitites like storm water drains, water supply facilities by constructing required OHT, provide necessary street lights etc., as per the standards specified by the Local Body".

2) (EWS) பொருளாதாரத்தால் பின் தங்கியவர்களுக்கு ஒதுக்கீடு செய்யப்படும் மனைகள் ஒருங்கிணைக்கவோ மாற்றி அமைக்கவோ கூடாது. ஆனால் கிராமப்புற பகுதிகளில் மனை ஒப்புதல் வழங்கப்பட்ட 3 வருடங்களுக்கு மேலாகியும் EWS மனைகள் விற்க இயலாத நிலை இருப்பின் அரசாணை எண்-16, நகராட்சி நிர்வாகம் மற்றும் குடிநீர் வழங்கல் துறை, நாள்-31.01.2020-ன்படி EWS மனைகளை ஒருங்கிணைப்பு செய்ய விண்ணப்பித்து உரிய அனுமதி பெறப்பட வேண்டும்.

3) பார்வை 9 மற்றும் 10-ல் கண்ட அரசு கடிதம் மற்றும் நகர் ஊரமைப்பு ஆணையர், சென்னை அவர்களின் சுற்றறிக்கையின்படி உள்ளாட்சிக்கு தானமாக வழங்கப்பட்ட இடங்களை உள்ளாட்சியின் பெயருக்கு மாற்றி வருவாய் ஆவணங்களில் உள்ளாட்சியின் பெயரில் உரிமை மாற்றம் செய்து வருவாய் ஆவணங்களில் சர்வே எண் உட்பிரிவு செய்யப்பட்ட பின்னரே உள்ளாட்சியால் மனைப்பிரிவுக்கு இறுதி ஒப்புதல் வழங்கப்பட வேண்டும்.

4) "The Tamil Nadu Government in G.O.Ms No: 112, Housing and Urban Development Department dated : 22.06.2017 have approved the Tamil Nadu Real Estate (Regulation & Development Act 2016), The promoter has to advertise, market, book sell or offer for sale or invite persons to purchase in any manner any plot, apartment or building, as the case may be in any Real Estate Project or part of it only after registering the Real Estate Project with the Real Estate Regulatory Authority – ன்படி நடவடிக்கை தொடருமாறு மனுதாரரை கேட்டுக்கொள்ளப்படுகிறது.

5) பார்வை-(5) மற்றும் (9)-ல் காணும் அரசாணையின்படி மனைகளுக்கான நன்னிலை வரி மற்றும் இதர கட்டணங்களை **(i)** ரூ5,000/- (நாள்-24.09.2021) **(ii)** வளர்ச்சி கட்டணம் ரூ.5,000/- (நாள்-29.09.2021) மற்றும் **OSR** கட்டணம் ரூ.1,95,000/- (நாள்-28.09.2021) அன்று செலுத்தப்பட்டுள்ளது. மேலும் கொடிநாள் நிதியாக நன்னிலைவரி கட்டணத்தில் 20% தொகையை **"Armed Force Flag Day Fund"** என்ற பெயரில் Payable at Chennai என தேசியமயமாக்கப்பட்ட வங்கியின் வரைவோலை பெறப்பட்டுள்ளது என தெரிவிக்கப்படுகிறது.

உறுப்பினர் செயலர்/உதவி இயக்குநர்,
காகிதபுரம் புதுநகர் வளர்ச்சிக்குழுமம்,
கரூர் மாவட்டம்.

இணைப்பு
வரைபடம் மற்றும் மனைப்பிரிவு நிபந்தனைகள்
(2 தொகுப்பு வரைபடங்கள் மற்றும் அசல் ஆவணங்கள்)

**பெறுநர்**
செயல் அலுவலர்
காகிதபுரம் பேரூராட்சி
புகளூர் வட்டம்
கரூர் மாவட்டம்.

**நகல்**
1)மனுதாரர் : திரு.P.சம்பத்(ம)திரு.K.சுப்ரமணியம்.
எண்.3, கிருஷ்ணபட்டரை தெரு
வேலாயுதம்பாளையம்,
புஞ்சை புகளூர்
கரூர் மாவட்டம். – 639 117.
(பத்தி ஒன்று மட்டும்)

2) இருப்பு கோப்பு (வரைபடம் -1 மற்றும் நிபந்தனைகள் படிவம்-1)
3) கோப்பு (வரைபடம் -1 மற்றும் நிபந்தனைகள் படிவம்-1)
4) **Tamil Nadu Real Estate Regulatory Authority (TNRERA), No.1A, 1st Floor, Gandhi Irwin Bridge Road, Egmore, *Chennai* – 600008.** (வரைபடம் -1 மற்றும் நிபந்தனைகள் படிவம்-1)

# கரூர் மாவட்டம், புகழூர் நகராட்சி ஆணையர் அவர்களின் செயல்முறைகள்

## முன்னிலை :- திரு.கு.கனிராஜ், பி.ஏ., பி.எல்,

ந.க.எண். 163/2021/அ2 நாள் :- 13.06.2022

பொருள்:- மனைப்பிரிவு வரைபட அனுமதி – கரூர் மாவட்டம் – புகழூர் நகராட்சி – புல எண்.1141/2 ல், 0.44 ஹெக்டேர் (1.09ஏக்கர்) பரப்பில் அமைந்துள்ள 1 முதல் 14 வரையான மனைப்பிரிவுக்கு நகர் ஊரமைப்பு துறையால் தொழில் நுட்ப அனுமதி வழங்கப்பட்டுள்ளது – இறுதி ஒப்புதல் வழங்குதல் –தொடர்பாக.

பார்வை:-
1. திரு.பி. சம்பத், மற்றும் திரு. கே. சுப்பிரமணியம் அவர்களின் விண்ணப்பம் நாள். 29.07.2021.
2. உறுப்பினர் செயலர்/உதவி இயக்குநர் காகிதபுரம் புதுநகர் வளர்ச்சிக்குழுமம் கரூர் மாவட்டம் அவர்களின் ந.க.எண். 95/2021/கா.பு.ந.வ.கு நாள் 17.08.2021
3. உறுப்பினர் செயலர்/உதவி இயக்குநர் காகிதபுரம் புதுநகர் வளர்ச்சிக்குழுமம் கரூர் மாவட்டம் அவர்களின் ந.க.எண். 95/2021/கா.பு.ந.வ.கு நாள் 20.10.2021
4. 13.09.2021ம் தேதிய நன்கொடை ஆவண பத்திரம் எண். 1227/2021
5. திரு.பி. சம்பத், மற்றும் திரு. கே. சுப்பிரமணியம் அவர்களின் விண்ணப்பம் நாள். 16.05.2022.
6. நகர் மன்ற தீர்மான எண். 68 /2022, நாள்.31.05.2022

* *** *

உத்தரவு :-

கரூர் மாவட்டம், புகழூர் வட்டம், புகழூர் நகராட்சிக்குட்பட்ட வார்டு எண். 24 புன்செய்ப்புகழூர் தெற்கு கிராமம் புல எண். 1141/2 ல் 0.44 ஹெக்டேர் (1.09ஏக்கர்) பரப்பளவில் மனைப்பிரிவு அமைப்பதற்கு அனுமதி கோரி திரு.பி. சம்பத், மற்றும் திரு.கே. சுப்பிரமணியம் ஆகியோரின் விண்ணப்பத்தின் பேரில் உத்தேச மனை பிரிவுக்கு சாலை அமைப்பு வரைபடத்திற்கு கரூர் மாவட்ட நகர் ஊரமைப்புத்துறை உறுப்பினர் செயலர்/ உதவி இயக்குநர் அவர்களால் பார்வை (2) ல் காணும் கடிதத்தில் ஒப்புதல் வழங்கப்பட்டுள்ளது.

மேற்படி ஒப்புதல் கடிதத்தில் தெரிவிக்கப்பட்டுள்ள நிபந்தனைகளின் படி உத்தேச மனைபிரிவில் மனுதாரர்களால் தார் சாலை, கழிவு நீர் வடிகால், குடிநீர் குழாய் மற்றும் தெருவிளக்குகள் அமைக்கப்பட்டுள்ளது. மேற்படி தார்சாலைக்காக ஒதுக்கப்பட்ட இடங்கள் வேலாயுதம்பாளையம் சார் பதிவாளர் அலுவலக ஆவண எண். 1227/2021 நாள். 13.09.2021 ன் படி நன்கொடை ஆவணம் மூலம் முந்தைய தமிழ்நாடு காகித ஆலை புகழூர் பேரூராட்சிக்கு (தற்போது நகராட்சி) ஒப்படைப்பு செய்யப்பட்டுள்ளது.

..2..

அதனைத் தொடர்ந்து மேற்படி உத்தேச மனைப்பிரிவு வரைபடத்திற்கு ம.வ/கா.பு.வ.க (க.மா) எண். 13/2021 நாள். 20.10.2021 என எண்ணிடப்பட்டு பார்வை (3) – இல் காணும் கடிதத்தில் தொழில் நுட்ப ஒப்புதல் வழங்கப்பட்டுள்ளது.

பார்வை (5) ல் காணும் கடிதத்தில் மனுதாரர், பார்வை (2) ல் காணும் கடிதத்தில் தெரிவிக்கப்பட்டுள்ள நிபந்தனைகள் அனைத்தும் பூர்த்தி செய்யப்பட்டுள்ளதால் மேற்படி மனைப்பிரிவுக்கு இறுதி ஒப்புதல் வழங்குமாறு கேட்டுக்கொண்டுள்ளார். அதன் படி பார்வை (6) ல் காணும் நகர் மன்ற தீர்மானத்தில் மேற்படி உத்தேச மனைப்பிரிவுக்கு இறுதி ஒப்புதல் அளிக்க இசைவளித்துள்ளது. எனவே பார்வை (3) காணும் கடிதத்தில் தெரிவிக்கப்பட்டுள்ள நிபந்தனைகளுக்குட்பட்டு, **புன்செய்ப்புகழூர் தெற்கு கிராமம் புல எண் 1141/2 ல் – 0.44 ஹெக்டேர் (1.09ஏக்கர்)** பரப்பளவில் **அமைந்துள்ள 1 முதல் 14 வரை உள்ள மனைபிரிவுக்கு இறுதி ஒப்புதல் வழங்கி உத்தரவிடப்படுகிறது. இத்துடன் அனுமதிக்கப்பட்ட மனைப்பிரிவு வரைபடம் ஒன்று இணைக்கப்பட்டுள்ளது.**

மேற்படி நிபந்தனைகளுக்கு மாறாக செயல்படும் பட்சத்தில் இந்த உத்தரவு தானே இரத்தாகிவிடும்.

PUGALUR MUNICIPALITY
Karur District
★ 639 117 ★

ஒப்பம்/- 13/06/2022
ஆணையர்,
புகழூர் நகராட்சி,
கரூர் மாவட்டம்.
13/6/2022

இணைப்பு :- வரைபடம் மற்றும் நிபந்தனைகள்–1

<u>பெறுதல் :-</u>

திரு.பி. சம்பத், மற்றும் திரு. கே. சுப்பிரமணியம்
எண்.3, கிருஷ்ணன்பட்டரை தெரு,
வேலாயுதம்பாளையம் (அஞ்சல்),
புகழூர் வட்டம்.
கரூர் மாவட்டம்.

நகல் :- உதவி இயக்குநர்/உறுப்பினர் செயலர், காகிதபுரம் புதுநகர் வளர்ச்சிக்குழுமம், கரூர் மாவட்டம் அவர்களுக்கு தகவலுக்காக அனுப்பப்படுகிறது.

சார்பதிவாளர், சார்பதிவாளர் அலுவலகம், வேலாயுதம்பாளையம் அவர்களுக்கு தகவலுக்காக அனுப்பப்படுகிறது.



## our services doesn't just end there

### Buying & Selling Services

Property Buying Assistance, Property Selling Support, Market Price Analysis, Owner Outreach and Negotiation.

### Legal & Documentation Services

Certified EC, Patta, legal opinions, property verification, due diligence, litigation solutions, and legal heir certificates.

### Property Development & Approvals

Building plan approvals, construction, layout and sub-division approvals, zone conversion, and occupancy certification.

### NRI & Investment Services

Escrow Services, Rentals, Litigation Solutions, Property Valuation and Property Management

### Compliance & Special Services

Demolition, Vaasthu checks, regularization of unauthorized buildings, and office space solutions.



# empowering your real estate decisions with smart tools

## Property Valuation & Cost Estimation

Guideline Value, Apartment Composite Value, Stamp Duty & Registration Fees Calculator, Building Value Calculator, Capital Gains Calculator, Area Unit Converter, Length Unit Converter

## Ownership, Compliance & Legal Verification

Encumbrance Certificate (EC) Search, Find Your SRO, Temple Property Check, WAQF Property Check, View Patta/Chitta, View FMB, Patta Analyzer, EC Analyzer

## Zoning & Land Use Analysis

Land Use Zone Finder, CRZ Zone Check, Aquifer Zone Check, CBA Check, EWS Check, Road Width Check, Proposed Road Widening Check, FSI Calculator

## Property Documentation & Workflow Tools

Forms & Templates, Document Generator, Document Translation, Dictionary

## Vastu & Property Management Tools

Home Vastu Shastra, Plot Vastu Shastra, Property Management

Verified RealEstate™

We’re honored to be part of your
real estate journey

3/350/2 Mettukuppam,
OMR Thoraipakkam,
Chennai, India

hello@verified.realestate
+91 9996 12 9996
www.verified.realestate